# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : CC No.107/2023 Date: 10.03.2026
Deposition of Witness for : அ.சா.2
Name : சூர்யா

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

எனது ஊரிலிருந்து ஈஷா யோகா மையத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்று விடலாம் என்றால் 3 மணி நேரத்தில் சென்று விடலாம். எங்கள் ஊரில் அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு காலை 8 மணிக்கு அங்கு போய் சேர்ந்தோம். இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிக்கொண்டு சென்றேன். வரும் போதும் நான் தான் ஓட்டிக்கொண்டு வந்தேன். நான் ஒட்டிச்சென்ற வண்டி வேகமாக செல்லும் திறன் கொண்டது என்றால் சரிதான். ஆனால் அந்த சமயத்தில் நான் மெதுவாக தான் சென்றேன். சம்பவ சமயத்தில் இருசக்கரவாகனத்தில் மூன்று நபர் சென்றோம் என்றால் சரிதான். அந்த வாகனம் என்னுடையது தான். ஈஷா யோகாமையத்தில் இருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் மதியம் சுமார் 1மணிக்கு புறப்பட்டு சங்ககிரி வரும் போது சுமார் 4.00 மணி இருக்கும். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்திருந்தேன். நான் தலைகவசம் அணிந்திருந்ததை போலிசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். நான் சென்ற தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு இடங்களில் மேம்பாலம் உள்ளது என்றால்

சரிதான். அதில் எந்த மேம்பாலத்தில் விபத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து ஈஷா யோகா மையத்திற்கு இருசக்கரவாகனத்தில் செல்வதற்கு சுமார் 6.00 மணி நேரம் ஆகும் என்றால் ஞாபகமில்லை. இரவு முழுவதும் கண் விழுத்து தூக்க கலக்கத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றதால் இடது பக்க பாலத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வேகமாக சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. இரு நபர்கள் செல்லக்கூடிய வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றதால் வேகத்தை கட்டுப்படுத்த முடியால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Surya